**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல். (குறள்.எண்.314)**

**பொருள்:** தீங்கு செய்தவரை தண்டிப்பது என்பது, அவர் வெட்கி தலை குனியும் படியாக அவருக்கு நன்மைகளைச் செய்ய வேண்டும்

**பழனி நகராட்சி**

**2018–ம்** ஆண்டு ஜுன் மாதம் **15–ம்** நாள். வெள்ளிக்கிழமை காலை **11.00** மணியளவில் பழனி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்.

நகராட்சி அலுவலகம், பழனி
நாள். 15–06–2018

தனி அலுவலர்
பழனி நகராட்சி

**கூட்டப்பொருள்**

**1.** பழனி நகராட்சிக்குச் சொந்தமான சுற்றுலா வாகனத்திற்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமை **31–03–2018–ம்** தேதியுடன் முடிவடைவதால், மேற்படி உரிமையினை **01–04–2018** முதல் வசூலிக்கும் உரிமைக்கு கீழ்க்காணும் தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் நடத்த உரிய விளம்பர அறிவிப்புகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஏலதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கியும், நாளிதழ்களில் மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் விளம்பர அறிவிப்பு கீழ்க்கண்ட நாட்களில் அதற்கெதிரே குறிப்பிடப்பட்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது.

ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்ட நாட்களில் அதிகபட்ச ஏலத் தொகை, ஒப்பந்த தொகை மற்றும் சமர்ப்பித்து கெண்ட ஒப்பந்ததாரர்களின் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நாள் | தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த தேதி | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் | ஏலம் விபரம் / கூடுதல் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 19.01.2018 | மக்கள் முகம் 30.12.2017 | இல்லை | இல்லை | ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொள்ள யாரும் விண்ணப்பிக்கவில்லை |
| 2 | 09.02.2018 | தினசங்கு 26.01.2018 | இல்லை | இல்லை | ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொள்ள யாரும் விண்ணப்பிக்கவில்லை |
| 3 | 28.02.2018 | மக்கள் முகம் 18.02.2018 | இல்லை | இல்லை | ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொள்ள யாரும் விண்ணப்பிக்கவில்லை |
| 4 | 09.03.2018 | மக்கள் முகம் 04.03.2018 | இல்லை | 2 நபர்கள் | திரு.எஸ்.ராஜபாண்டி, திண்டுக்கல் என்பவர் அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.2,45,25,000/–க்கு கோரியுள்ளார் |
| 5 | 20.03.2018 | மக்கள் குரல் 13.03.2018 | இல்லை | இல்லை | ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொள்ள யாரும் விண்ணப்பிக்கவில்லை |
| 6 | 27.03.2018 | தினமலர் 20.03.2018 | இல்லை | 1 நபர் | திரு.எஸ்.ராஜபாண்டி, திண்டுக்கல் என்பவர் அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.2,45,25,000/ –க்கு கோரியுள்ளார் |
| 7 | 11.04.2018 | மக்கள் முகம் 02.04.2018 | இல்லை | 2 நபர்கள் | திரு.எஸ்.ராஜபாண்டி, திண்டுக்கல் என்பவர் அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.2,47,00,000/–க்கு கோரியுள்ளார் |
| 8 | 26.04.2018 | மக்கள் குரல் 19.04.2018 | இல்லை | 3 நபர்கள் | திரு.எஸ்.ராஜபாண்டி, திண்டுக்கல் என்பவர் அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.2,73,00,500/–க்கு கோரியுள்ளார் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | 08.05.2018 | மக்கள் முகம் 28.04.2018 | இல்லை | 2 நபர்கள் | திருமதி.ஜோதி, க/பெ.கழூவன், மதுரை என்பவர் அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.2,77,00,000/–க்கு கோரியுள்ளார் |
| 10 | 24.05.2018 | தினபூமி 15.05.2018 | 3 நபர்கள் | 1 நபர் | திரு.டி.என்.ராஜவர்மன், மதுரை என்பவர் அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.2,85,00,000/– ம் திருமதி.ஜோதி, க/பெ.கழூவன், மதுரை என்பவர் அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.2,88,00,000/–க்கு கோரியுள்ளார். |

மேற்கண்டவாறு 27.03.2018 ஆம் தேதி நடைபெற்ற ஆறாவது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் திரு.ராஜபாண்டி என்பவர் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.2,45,25,000/– ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகை கடந்த ஆண்டு ஏலத் தொகையைவிடவும் சராசரி ஏலத் தொகையை விடவும் குறைவாக உள்ளதால், அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

31.03.2018–ல் ஏற்கனவே எடுத்திருந்த குத்தகை தாரர்களின் குத்தகை உரிமம் முடிவடைவதால் இக்குத்தகை இனத்தினை துறை மூலம் வசூல் செய்ய ஏதுவாக இந்நகராட்சி 27–03–2018–ம் தேதிய செயல்முறை உத்திரவின்படியும் வருவாய் உதவியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் கொண்டு வசூல் செய்யும் பணி மேற்கொள்ள உத்திரவு பிறப்பிக்கப்பட்டு துறை மூலம் வசூலிக்கப்படும் நிலையில் ஏழாவது முறையாக மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 11–04–2018–ம் தேதி நிர்ணயம் செய்யப்பட்டது.

மேற்படி அழைப்பின்படி திரு.எஸ்.இராஜபாண்டி என்பவர் மீண்டும் அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.24700000/–க்கு கோரியுள்ளார். மேற்படி தொகை கடந்த மூன்றாண்டு சராசரி மற்றும் கடந்த ஆண்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகையை விட குறைவாக இருந்ததால் மேற்படி தொகை ஏற்கப்படவில்லை. மேலும் நகராட்சி பணியாளர்களைக் கொண்டு 5 இடங்களில் பகல் மற்றும் இரவு நேரங்களில் சுழற்சி முறையில் வசூல் பணியில் ஈடுபடுவதால் நகராட்சி வரி வசூல் மற்றும் பொதுசுகாதார பணிகள் மற்றும் அலுவலக பணிகள் பாதிக்கப்படுவதை கருத்தில் கொண்டு TEXCO நிறுவனம் மூலம் முன்னாள் இராணுவத்தினரா கொண்டு மேற்கொள்ளலாமா எனவும் அல்லது குறைந்த பட்ச ஏலத்தொகையை ஏற்க்கலாமா என்பது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.4281/2017/அ1 நாள். 12–04–2018–ல் தெளிவுரை கோரப்பட்டது. தெளிவுரை எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 8–வது முறையாக ஏலம் மற்றும் ஒப்பறதப்புள்ளி கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பின்படி திரு.விஸ்வநாதன் , திருப்பூர் என்பவர் ஏல நிபற்தனை கோரி விண்ணப்பித்தார். அன்னாருக்கு எல நிபந்தனை குறித்து விபரம் 16.04.2018 ஆம் தேதிகய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டும் அன்னார் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை. 26–04–2018–ம் தேதி தொடர்ந்து 8–வது முறையாக நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் திரு.எஸ்.ராஜபாண்டி திண்டுக்கல் என்பவர் ரூ.27300500/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகை குறைவாக இருந்ததால் 9– வது முறையாக 08–05–2018–ம் தேதி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நாள் நிர்ணயம் செய்யப்பட்டதில் ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை ஒப்பந்தப்புள்ளியில் 2 நபர்கள் கலந்து கொண்டனர். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் திருமதி.ஜோதி க/பெ கழூவன், மதுரை என்பவர் அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.27700000/–க்கு அதிகபட்சமாக ஒப்பந்தப்புள்ளி கோரினார்.இந்நிலையில் திரு.தமிழ்மணி , நகர செயலாளர் தி.மு.க என்பவர் ஒப்பந்தப்புள்ளி தொகை குறைவாக உள்ளதால் மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மனு செய்தார். அதனை தொடர்ந்து 10–வது முறையாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24–05–2018–ம் தேதி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நாள் நிர்ணயம் செய்யப்பட்டது. மேற்படி ஏலத்தில் 3 நபர்களும் ஒப்பந்தப்புள்ளியில் 3 நபர்களும் வைப்புத் தொகை செலுத்தியதில் 3 நபர்கள் மட்டும் கலந்து கொண்டனர். ஏலத்தில் மூன்று நபர்கள் அதிகபட்ச ஏலக் கேள்வியாக ரூ.28500000/–க்கு திரு.ராஜவர்மன் என்பவர் ஏலம் கோரியுள்ளார். பின்னர் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டதில் திருமதி.ஜோதி க/பெ கழூவன், மதுரை என்பவர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்ததில் அன்னார் அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.28800000/–க்கு கோரியுள்ளார்.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.11996/2018/ஆர்3 நாள். 29–05–2018–ம் தேதிய கடிதத்தில் நகராட்சி குத்தகை இனங்களை குத்தகைக்கு விடுவது தொடர்பான நடவடிக்கைகள் சம்மந்தப்பட்ட நகராட்சி ஆணையரது வரம்பிற்க்குட்பட்டுள்ளதால் நகர்மன்ற தீர்மானத்தின் அடிப்படையிலும் உரிய விதிமுறைகளின் படியும் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நகராட்சிக்கு வருமான அடிப்படையில் கணக்கிடப்பட்டதில் கணக்கீட்டின் படி குத்தகை விபரம் கீழ்க்கண்டவாறு.

I) குத்தகைதாரர் மூலம் நகராட்சிக்கு வரும் வருமானம் ரூ.2,88,00,000/–

<u>II ) நகராட்சி துறை மூலம் வசூல் வருமானம்</u>

01–04–2018 முதல் 07–06–2018 வரை துறை மூலம் வசூல் ரூ.5324653/–

(68 நாட்கள்)

**நகராட்சி துறை மூலம் உத்தேசமாக ஏற்படும் செலவினம்**

1. பணியாளர்கள் ஊதியம் ரூ. 3594672/–
(வருவாய் உதவியாளர்கள்,அலுவலக உதவியாளர்கள்
துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும்
துப்புரவு பணியாளர்கள் மொத்தம் 13 நபர்கள் ஆண்டு ஒன்றுக்கு)
2. ரசீது புத்தக செலவினம் ரூ. 100000/–

**மொத்தம் ரூ.3694672/–**

**நகராட்சி துறை மூலம் எதிர்பார்க்கும் வருமானம் : ரூ.2,48,86,288/–**

**அதிக பட்ச தொகை ஒரு நாளைக்கு : ரூ. 68,182/–**

**குறைந்த பட்ச தொகை ஒரு நாளைக்கு : ரூ.38,749/–**

**III. TEXCO பணியாளர்கள் மூலம் வசூல் பணி மேற்கொண்டால் ஏற்படும் செலவினம்**

| வ.எண். | விபரம் | எண்ணிக்கை / தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வசூல் மையம் | 5 எண்ணிக்கை |
| 2 | ஒரு மையத்திற்கு 3 நபர்கள் வீதம் ( 8 மணி நேரத்திற்கு) | 15 நபர்கள் |
| 3 | ஒரு மாதத்திற்கு ஒரு நபர் ஊதியம் (EPF + ESI உட்பட) | 21,000/– |
| 4 | 15 நபர்களுக்கு மாத ஊதியம் | 3,15,000/– |
| 5 | ஒரு ஆண்டிற்கான மாத ஊதியம் | 37,80,000/– |
| 6 | ரசீது புத்தகம் செலவினம் | 1,00,000/– |
| **மொத்தம்** | | **38,80,000/–** |

கோடைகாலம் முடிவுற்றமையால் மேற்கண்ட நாட்களில் துறை மூலம் வசூல் செய்ததில் ஒரு நாளைக்கு ரூ.38,749/– வீதம் வருடத்திற்கு தொகை ரூ.1,41,43,385/– ஆகிறது.

குத்தகைதாரருக்கு ஒப்படைக்கப்பட்டால் நகராட்சிக்கு வருவாய் ரூ.28800000/–ஆகும். ஆதலால் மேலே கண்டுள்ளபடி ஒப்பிட்டு பார்க்கும் பொழுது நகராட்சிக்கு துறை மூலம் வசூல் பணி குறைந்த அளவு வருவாய் மட்டுமே வருவதாலும் வசூலிக்கப்படும் மையங்கள் அதிகபட்சமாக உள்ளதாலும் நகராட்சி வரி வசூல் பணி மற்றும் பொது சுகாதார பணிகள், அலுவலக பணிகள் பாதிக்கப்படுவதாலும் TEXCO மூலம் வசூல் பணி மேற்கொண்டால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுவதை கருத்தில் கொண்டும் நகராட்சி நிர்வாக நலன் கருதியும் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் தெளிவுரையில் குறிப்பிட்டுள்ளபடி நகராட்சிக்கு தொடர் நிதி இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு திருமதி.ஜோதி க/பெ கழுவன், மதுரை என்பவருடைய உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கூடுதல் கேள்வித் தொகை ரூ.28800000/–ஐ ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.11996/2018/ஆர்3 நாள். 29–05–2018–ம் தேதிய கடிதத்தில் நகராட்சி குத்தகை இனங்களை குத்தகைக்கு விடுவது தொடர்பான நடவடிக்கைகள் சம்மந்தப்பட்ட நகராட்சி ஆணையரது வரம்பிற்க்குட்பட்டுள்ளதால் நகர்மன்ற தீர்மானத்தின் அடிப்படையிலும் உரிய விதிமுறைகளின் படியும் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி.ஜோதி, க/பெ.கழுவன், மதுரை என்பவரின் கேள்வியானது கடந்த ஆண்டு ஏலத் தொகை ரூ.3,67,13,250/–ஐ விட ரூ.79,13,250/– குறைவாக உள்ளது. மூன்று ஆண்டு சராசரி தொகை ரூ.3,41,41,243/–ஐ விட ரூ.53,41,243/– குறைவாகவும் , திருவிழாக்கள் மற்றும் கோடை விடுமுறை காலங்கள் தவரித்தால் துறை மூலம் வரக்கூடிய உத்தேச அதிகபட்ச வசூல் தொகை ரூ.2,85,80,960/–ல் நிர்வாக செலவினம் ரூ.36,94,672/– போக நகராட்சிக்கு நிகர லாபமாக ரூ.2,48,86,288/– மட்டுமே கிடைக்க வாய்ப்புள்ளது. இந்நிலையில் பழனி நகர் பகுதியில் அமைந்துள்ள முக்கிய ஸ்தலமான பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் அமைந்துள்ளது. இதில் திருவிழாக்கள் மற்றும் கோடைகால விடுமுறைகள் முடிவுற்ற காரணத்தாலும் சுற்றுலா பயணிகள் வாகனங்களின் வருகை எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. ஏலத் தொகை ரூ.2,88,00,000/–ல் துறை மூலம் வசூல் தொகை ரூ.2,48,86,288/–ம் கழிக்கும் பட்சத்தில் ரூ.39,13,712/–ம் கூடுதலாக உள்ளதால், குத்தகைதாரருக்கு ஒப்படைக்கப்பட்டால் நகராட்சிக்கு வருவாய் ரூ.28800000/–ஆகும். ஆதலால் மேலே கண்டுள்ளபடி ஒப்பிட்டு பார்க்கும் பொழுது நகராட்சிக்கு துறை மூலம் வசூல் பணி குறைந்த அளவு வருவாய் மட்டுமே வருவதாலும் வசூலிக்கப்படும் மையங்கள் அதிகபட்சமாக உள்ளதாலும் நகராட்சி வரி வசூல் பணி மற்றும்

பொது சுகாதார பணிகள், அலுவலக பணிகள் பாதிக்கப்படுவதாலும் **TEXCO** மூலம் வசூல் பணி மேற்கொண்டால்நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுவதை கருத்தில் கொண்டும் நகராட்சி நிர்வாக நலன் கருதியும் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் தெளிவுரையில் றிப்பட்டுள்ளபடி நகராட்சிக்கு தொடர் நிதி இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு திருமதி.ஜோதி க/பெ கழுவன், மதுரை என்பவருடைய உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கூடுதல் கேள்வித் தொகை ரூ.28800000/–ஐ மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண்.4281/2017/அ1)**

**2.** பழனி நகராட்சி வ.உ.சி பேருந்து நிலையத்தில் அம்மா உணவகம் கடந்த 24.05.2015–ம் நாளன்று துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்காணும் அம்மா உணவகத்திற்கு தேவையான இட்லி, சாம்பார், தயிர் சாத பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் வழங்குவதற்கு இரசீது புத்தகங்கள் வாங்குவதற்கு அரசாணை எண்.118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.09.2014–ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2017–2018–ஆம் ஆண்டிற்கான செலவினங்கள் கீழ்க்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பொருள்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மளிகைகள் | 9,46,133 |
| 2 | காய்கறிகள் | 4,07,368 |
| 3 | ஆவின்பால் | 2,08,215 |
| 4 | எரிவாயு உருளைகள் | 4,32,660 |
| 5 | அரிசி | 19,200 |
| 6 | மகளிர் குழு சம்பளம் | 8,25,000 |
| மொத்தம் | | 28,38,576 |

மேற்கண்ட செலவினங்களின்படி, 2018–2019–ம் ஆண்டிற்கு செலவுத் தொகை ரூ.30,00,000/– தேவைப்படுகிறது. மேற்கண்ட செலவினத் தொகை வருவாய் மூலதன நிதியில் செலவு செய்திடவும், மேற்கண்ட பொருட்களான கீழ்க்கண்ட நிறுவனங்கள் மூலம் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

| வ. எண் | பொருள்கள் | நிறுவனங்கள் |
|---|---|---|
| 1 | மளிகைகள் | DD 500 அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஊழியர்கள் கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட், பழனி |
| 2 | காய்கறிகள் | |
| 3 | ஆவின்பால் | DD 160 DDCMPU Ltd, பழனி |
| 4 | எரிவாயு உருளைகள் | **NKR NDNE INDANE GAS AGENCY,** பழனி |
| 5 | அரிசி | நுகர்பொருள் வாணிபக்கழகம், பழனி |
| 6 | மகளிர் குழு சம்பளம் | அம்மா உணவகத்தில் பணிபுரியும் மகளிர் சுயஉதவிக் குழு |
| 7 | இரசீது புத்தகங்கள் | தனி அலுவலர், திண்டுக்கல் மாவட்ட மகளிர் தொழில் கூட்டுறவு சங்கம் எஸ்.டபிள்யூ–88, திண்டுக்கல் |

மேற்கண்ட நிறுவனங்கள் மூலம் பொருள்கள் வினியோகம் செய்திடவும் மன்றப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u> 2018–2019–ஆம் ஆண்டிற்கான அம்மா உணவகத்திற்குத் தேவையான உணவுப்பொருள்கள் மளிகை, காய்கறிகள் வினியோகம் செய்வதற்கு DD 500 அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஊழியர்கள் கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட், பழனி நிறுவனத்திற்கும், எரிவாயு உருளைகள் வினியோகம் செய்வதற்கு NKR NDNE INDANE GAS AGENCY, பழனி நிறுவனத்திற்கும், ஆவின் பால் நிறுவனமான DD 160 DDCMPU Ltd, பழனி நிறுவனத்திற்கும், அரிசி வினியோகம் செய்வதற்கு நுகர்பொருள் வாணிபக்கழகம், பழனி அலுவலகத்திற்கும் மற்றும் இரசீது புத்தகங்கள் அச்சடித்து வினியோகம் செய்வதற்கு அரசு சார்ந்த நிறுவனமான தனி அலுவலர், திண்டுக்கல் மாவட்ட மகளிர் தொழில் கூட்டுறவு சங்கம் எஸ்.டபிள்யூ–88, திண்டுக்கல் நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் அனுமதிக்கலாம்.

**3.** அரசாணை எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.12.01.1999–ன்படி ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தொழில் முறை சீராய்வு செய்து குறைந்தது 25% அதிகபட்சமாக 35% உயர்வு செய்யப்படவேண்டுமெனதெரிவிக்கப்பட்டதின்பேரில் 2008–2009–ஆம் அரையாண்டில் 01.10.1998 முதல் 25% உயர்வு செய்யப்பட்டது. மேற்படி அரசாணையின்படி 01.10.2013 முதல் (2013–2014 இரண்டாம் அரையாண்டு) வரிச் சீராய்வு செய்யப்பட்டது.

மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.12503/2018/ஆர்1, நாள்.21.05.2018–ன் சுற்றறிக்கையின்படி தொழில் வரி சீராய்வு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சீராய்வு 01.10.2018 முதல் கணக்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, தற்போது நடைமுறையில் உள்ள அரையாண்டு தொழில் வரி தொகையும் 01.10.2018 முதல் உயர்வு செய்யப்பட வேண்டிய குறைந்த பட்சம் 25% சதவீதம் அதிகபட்சம் 35% சதவீதம் கீழ்க்கண்டுள்ளவாறு பட்டியலிட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ | அரையாண்டு வருமானம் | ஏற்கனவே உள்ள வரி | 25% உயர்வு செய்தால் | 35% உயர்வு செய்தால் |
|---|---|---|---|---|
| 1 | 21,000/– வரை | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | 21,001 /– வரை முதல் 30,000/– வரை | 130/– | 130+32.50=162.50 | 130+45.50=175.50 |
| 3 | 30,001/– முதல் 45,000/– வரை | 330/– | 330+82.50=412.50 | 330+115.50=445.50 |
| 4 | 45,001/– முதல் 60,000/– வரை | 640/– | 640+160=800 | 640+224=864 |
| 5 | 60,001/– முதல் 75,000/– | 960/– | 960+240=1200 | 960+336=1296 |
| 6 | 75,001/– மற்றும் அதற்கு மேல் | 1250/– | 1250+312.50=1562.50 | 1250+437.50=1685.50 |

**அலுவலகக் குறிப்பு:** மத்திய /மாநில அரசு / அரசு சார்ந்த நிறுவனங்கள், வங்கிகள், கூட்டுறவுத் துறை, போக்குவரத்து மின்சார வாரியம், இந்து அறநிலைத் துறை மற்றும் அனைத்து துறையில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் குத்தகை, உரிமைதாரார்கள், அரசு மற்றும் தனியார் தொழில் சார்ந்த கட்டிடங்களுக்கும் மற்றும் அனைத்து வணிகர்களும் (Traders) தொழில் முனைவோர்களும் தற்போதுள்ள அரையாண்டு தொழில் வரியில்குறைந்தபட்சம்25%–லிருந்து 35%–க்குள் உயர்வு செய்வது தொடர்பாக மன்றம் முடிவு செய்யலாம். வருடத்திற்கு ரூ.2500/–க்கு மேல் தொழில் வரி விதிக்கக் கூடாது என அரசியல் அமைப்பு சட்டம் பிரிவு 276(2)–ன் கீழ் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் ரூ.75,001/–க்கு மேல் வருமானம் ஈட்டுபவர்களுக்கு ஏற்கனவே ரூ.1250/– அரையாண்டிற்கு பழைய வரியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், மேற்படி பிரிவு வருமானம் ஈட்டுபவர்களுக்கு வரி உயர்வு அமுல்படுத்த இயலாது என்பதால், பிரிவு 2 முதல் 5 வரை உள்ள வருமானம் ஈட்டுபவர்களுக்கு 25% பழைய வரியிலிருந்து உயர்வு செய்யலாம். மேலும், தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும் மற்றும் இதர செலவினங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பாதாயிரம் மட்டும்) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**4.** இந்நகராட்சியில் 2016–17–ம் ஆண்டிற்கான தணிக்கை முடிவு பெற்று விட்டதால் வருவாய் நிதி, குடிநீர் நிதி, கல்வி நிதி ஆகிய மூன்று நிதிகளிலும் 6 செட் நகல் எடுத்ததற்கும் நகல் எடுத்ததை புக் பைண்டிங் செய்ததற்கும் செலவினத் தொகை ரூ. 12178/–ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம்

**5.** நகராட்சிப் பகுதியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/தே.பொ.1 நாள். 19–10–2017, 07–12–2017,13–12–2017 மற்றும் 31–01–2018–ம் தேதிகளின் கடிதத்தின் படி உரிய வழிகாட்டுதலின் படி வார்டு மறுவரைறை தயார் செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன் படி பழனி நகராட்சியின் 33 வார்டுகளுக்கு (ஜிக்ஜாக் முறையில்) மறுவரையறை கருத்துருக்கள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்யவும் படிவங்கள் 1ஈ, 2ஈ, 3அ,ஆ மற்றும் 4ஈ போன்ற படிவங்களை புத்தக வடிவில் தயார் செய்யவும், ஜெராக்ஸ் நகல் , எழுது பொருட்கள் மற்றும் இது தொடர்பான இதர செலவினங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.3,00,000/–க்குள் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ளவும், மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம் **(ந.க.எண்.3819/2017/சி3)**

**6.** பழநி நகராட்சியில் துப்புரவு பணியாளராகப் பணிபுரிந்து பணியிடையே 16–03–2016–ல் இறந்த திருமதி. அக்கம்மாள் / கருப்பன், என்பரின் வாரிசுதாரர் (ம) மகனுமான திரு.முருகானந்தம் என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க கோரியுள்ளதன்படி, அன்னாரின் விண்ணபம் உரிய இணைப்புகளுடன் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 04–04–2016–ல் சமர்ப்பிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32871/2018/எச்2, நாள்– 27–2–2016–ல், திரு.வே.முருகானந்தம் என்பவரின் வயது 42 என வட்டாட்சியரால் தெரிவிக்கப்பட்டுள்ளதால், தனியருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க அரசு விதிகளில் இடமில்லை என்பதனை மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், திரு.வே.முருகானந்தம் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் மேற்க் கொள்ள அரசு விதிகளில் இடமில்லை என்ற விபரம் தெரிவிக்கப்பட்டதில், திரு.வே.முருகாந்தம் என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளையில் பணி நியமனம் வழங்க கோரி வழக்கு எண். WP(MD)No. 1279 of 2018–ல்

வழக்கு தொடர்ந்ததன் அடிப்படையில், பழநி நகராட்சியின் சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.G.அர்ஜுனன், அவர்களால் எதிர் வழக்கு தொடரப்பட்டது. மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளை வழங்கிய வழக்கின் தீர்ப்பின் நகல் பெறப்பட்டுள்ளது. (WP(MD)No.1279.2016 நாள்–27-02-2018)

எனவே, நகராட்சி நிர்வாக வழக்கறிஞருக்கு வழக்காடு கட்டணத் தொகை ரூ.7500/– வழங்கவும் உரிய மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> அனுமதிக்கலாம். (ந.க.எண்.1218/2012/எச்2)

**7.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.7039/2018/ஜெ3, நாள்–15–03–2018–ன்படியும், தமிழ்நாடு நகராட்சி பணிவிதிகள் 1970, விதி 31(சி)/பகுதி–II மற்றும் நிர்வாக நலன் கருதி திரு.பா.சேதுராமன், துப்புரவு பணிமேற்பார்வையாளரை ஒட்டன்சத்திரம் நகராட்சியிலிருந்து பழநி நகராட்சிக்கு பணி மாறுதல் செய்து ஆணையிடப்பட்டுள்ளதன்படியும், ஆணையாளர் ஒட்டன்சத்திரம் அவர்களின் செயல்முறை உத்திரவில் 16–03–2018 பிற்பகல் முதல் விடுவித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி, பழநி நகராட்சியில் துப்புரவு பணி மேற்பார்வையாளரை பணியில் சேர அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. ஆனால் திரு.ப.சேதுராமன், திருமங்கலம் நகராட்சியில் துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடம் கோரியதற்கு பழநி நகராட்சியில் துப்புரவு பணி மேற்பார்வையாளராக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளையில் பணி மாறுதல் வழங்க கோரி வழக்கு எண்.WP(MD)No. 10777 of 2018–ல் வழக்கு தொடர்ந்ததன் அடிப்படையில், பழநி நகராட்சியின் சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.G.அர்ஜுனன், அவர்களால் எதிர் வழக்கு தொடரப்பட்டது. எனவே, நகராட்சி நிர்வாக வழக்கறிஞருக்கு வழக்காடு கட்டணத் தொகை ரூ.10,000/– வழங்கவும் உரிய மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> அனுமதிக்கலாம். (ந.க.எண்.2155/2018/எச்1)

**8.** பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 57 AT 5901 (ABC) நாய்கள் பயண வாகனம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று காலம் 17–05–2018–ம் தேதியுடன் முடிவடைவதால் 2018–2019 ஆண்டிற்கான தகுதிச்சான்று புதுப்பிக்க மராமத்து பணிகள் மேற்கொண்டு வர்ணம் பூசும் பணிக்குண்டான ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர்நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.25,000/– மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகக் கட்டணங்கள் ரூ.4,000/– ஆக மொத்தம் ரூ.29,000/– (இருபத்து ஒன்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம் பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் தனி அலுவலர் அவர்களின் கூட்டத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.2298/2018/எச்2)

**9.** பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 57 AX 8905 காம்பேக்டர் வாகனம் தகுதிச்சான்று காலம் 02–06–2018–வுடன் முடிவடைவதால் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று புதுபிக்க மராமத்து பணிகள் மேற்கொண்டு வர்ணம் பூசுவதற்கு அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.70,000/– தகுதி சான்று பெறுவதற்கான உத்தேச கட்டணம் ரூ.4,000/– ஆகமொத்தம் ரூ.74,000/– பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் தனி அலுவலர் அவர்கள் கூட்டத்தின் பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>பொது சுகாதார அவசரம் அவசியத்தை முன்னிட்டு மராமத்து பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு தனி அலுவலர் அவர்கள் கூட்டத்தில் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2540/2018/எச்2)

**10.** பழநி நகராட்சிகுட்பட்ட பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 57 AX 8905 காம்பேக்டர் வாகனத்திற்கு பிடிஓ பம்ப் மற்றும் கியர்பாக்ஸ் பழுதுகளை சரி செய்ய தனி அலுவ்லர் அவர்களின் 08–05–2018–ம் தேதிய அனுமதியின்படி பெறப்பட்ட கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | நாதன் மோட்டார்ஸ்,<br>திண்டுக்கல் ரோடு, பழநி | 14300/- |
| 2 | கவிதா ஆட்டோ ஒர்க்ஸ் | 12900/- |
| 3 | வாசன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>688 திண்டுக்கல் ரோடு, பழநி | 13,500/- |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கவிதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் நிறுவனம் வழங்கிய தொகையான ரூ.12,900/– குறைவாக உள்ளது. எனவே பொது சுகாதார நலன் கருதி நகர் பகுதியில் உள்ள குப்பைகளை உடனுக்குடன் அகற்ற வாகனம் தேவைப்படுவதல் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஏற்றுக்கொண்டு, பணி உத்திரவு வழங்கி வாகனம் மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கும் தொகை ரூ.12,900/–ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** பொது சுகாதார நலன் கருதி அவசரம் அவசியம் முன்னிட்டு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கவிதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், நிறுவனத்திற்கு விலைப்புள்ளியை ஏற்றுக் கொண்டு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**11.** பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு எதிர்வரும் பருவமழைக் காலத்தை முன்னிட்டு 1 முதல் 33 வார்டுகளில் கொசு ஒழிப்பு பணிக்காகவும் பொதுமக்கள் நலன் மற்றும் பொது சுகாதாரம் பேண கிரிமி நாசினிகள் போதியளவு இருப்பு வைத்திருக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்திருப்பதால், பிரிவு 1 முதல் 6 வரை உள்ள துப்புரவு பணிகளுக்கு தேவையான கிருமி நாசினி மருந்துகள் தேவைப்பட்டியல் 1 முதல் 6 வரையுள்ள துப்புரவு ஆய்வாளர்களால் வழங்கப்பட்ட பட்டியல் விவரப்படி கீழ்கண்டுள்ளவாறு வாங்கி வழங்கிட அரசு / அரசு சார்ந்த அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து விநியோக உத்திரவு வழங்கலாம்.

| வ. எண் | பிரிவு 1 முதல் 6 வரை கிருமி நாசினி மருந்துகள் | |
|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்பு | 13 MT (13000 kg) |
| 2 | பிளிச்சிங் பவுடர் | 10 MT (10000kg) |

நீர்த்த சுண்ணாம்புத்தூள் 1kg ரூ. 13/– வீதம் (13000 x 13 = 1,69,000/–) பிளிச்சிங் பவுடர் 1kg ரூ. 38/– வீதம் (10000 x 38 = 3,80,000/–) ஆக மொத்தம் ரூ.5,49,000/– (ஐந்து லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் தனி அலுவலரின் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி கூட்டப்பொருள் அனுமதிக்கலாம். மன்ற அனுமதி எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கி அங்கீகரிக்ககாம் (ந.க.எண்.2807/2018/எச்2).

**12.** பழநி நகராட்சி உரக்கிடங்கில் குப்பைகளை அகற்றும் பணி மற்றும் எடை மேடை அருகே உள்ள அறையில் மராமத்து செய்யும் பணிக்கு பொது நிதி 2018–2019–ன் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள தனி அலுவலர் கூட்டப் பொருள் எண்.369 நாள் 22.02.2018 ன் கீழ் நிர்வாக அனுமதி அளித்ததின் பேரில் **25–04–2018** –ம் தேதியன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு,

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | **திரு. நா.கருப்புச்சாமி ,**<br>18/32, டி.கே.எண்.புதூர்,<br>ஆயக்குடி (Po), பழநி (Tk). | - 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| 2. | **திரு.K.ஆறுமுகம்**<br>80/2, அப்பர் தெரு,<br>முதல் குறுக்குத் தெரு,<br>R.F.ரோடு,பழநி – 624 601 | 7.16% மதிப்பீட்டிற்கு அதிகம். |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வரிசை எண்1 ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் **திரு. நா.கருப்புச்சாமி** , என்பவர் -0.01 **சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு :**

1. குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 4353 /2018/இ2).

**13.** பழநி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் தனியார் வசம் பராமரிப்பு பணி மேற்கொள்ள 27.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளியில் தொழில் நுட்ப தகுதிக்கான கூர்ந்தாய்வில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியினை இழந்துள்ளார்கள் மீதம் உள்ள ஒரே ஒப்பந்தப்புள்ளி தகுதி உள்ளது. அந்த ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ .எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | **M/s.** மாருதி டிரேடிங் கார்ப்பரேஷன்,<br>674, மதுரை ரோடு,தேனி. | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |

எனவே மதிப்பீட்டை விட 0.01% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

**அலுவலகக் குறிப்பு :**

1) அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொண்டதற்கான (LOA) வரைவு வழங்கியதையும் அனுமதிக்கலாம். (ந.க.எண். 81 /2015/இ2).

**14.**பழநி நகராட்சியின் குடிநீர் ஆதாரமான கோடைகால நீர்த்தேக்கத்தில் வளர்ந்துவரும் சங்கிலி பாசிகள் அப்புறப்படுத்தப்பட்டு வந்தாலும் பாசிகளை கட்டுப்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், மேற்கண்ட பாசிகளை உணவாக சாப்பிடக்கூடிய மீன்களை வளர்த்துக் கொள்ளவும் பிடித்துக்கொள்ளவும் அவற்றை மேற்படி திட்டத்தினை முதற்கட்டமாக மீன்களை விடுவதற்கு குத்தகை மூலம் விட்டுக்கொள்ளவும் அதற்கான நிபந்தனைகளுக்கும் மன்றத்தில் அனுமதி கோரப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. கோடைகால நீர்த்தேக்கத்தில் வளர்ந்துள்ள சங்கிலி பாசிகளை மீன்களை சாப்பிடக்கூடிய மீன்கள் தவிர வேறு எந்த மீனும் குளத்தில் விட்டு வளர்க்கக்கூடாது.
2. மீன்கள் தண்ணீரில் தானாக வளர வேண்டுமே தவிர அதற்கான தானியமோ அல்லது எந்த உணவும் குளத்தில் போடக்கூடாது. மீன்களால் தண்ணீர் மாசுபடாதவாறு பராமரிக்கப்பட வேண்டும்.
3. நீர்த்தேக்கத்தில் மீன்களை பிடிக்கும் பொழுது அல்லது அப்புறப்படுத்தும் பொழுது உரிய பாதுகாப்பு முறையில் படகு / பரிசல் மட்டும் பயன்படுத்தி அலுவலக அனுமதி பெற்று செய்யப்பட வேண்டும். குளத்தினை கலக்கவோ அல்லது சகதி கிளப்ப கூடாது.
4. குடிநீர் எடுக்கும் நீர்த்தேக்கம் என்பதால் எந்த பணியாக இருந்தாலும் பகல் நேரத்தில் இளநிலை பொறியாளர் அல்லது அலுவலக பணியாளர்கள் முன்னிலையிலேயே செய்ய வேண்டும். எந்த காரணம் கொண்டும் இரவில் பணி மேற்கொள்ள அனுமதிக்க இயலாது.
5. நீர்த்தேக்கத்தில் குடிநீர் குழாய்களுக்கோ, நீர்தேக்கப் பகுதிகளுக்கோ எவ்வித சேதப்படுத்தினால் நகராட்சி சட்ட விதிகளின் படி, அதற்கான உடனடியாக உத்திரவு ரத்து செய்யப்படுவதுடன் அதற்குண்டான தொகை வசூலிக்கப்படும்.
6. நகராட்சி உரிய அனுமதியின்றி மீன்களை விடுவதோ பிடிப்பதோ கூடாது. அப்படி ஏதேனும் நடந்திருப்பது தெரியவந்தால் குத்தகை ரத்து செய்யப்பட்டு அதற்காக செலுத்தப்படும் வைப்புத் தொகை ஈடுசெய்து நகராட்சி கணக்கில் வரவு வைக்கப்படும்.
7. மீன்கள் விடுவதற்கு முன் நீர் எடுப்பு குழாயில் மீன்கள் புகா வண்ணம் வலைதடுப்பு அமைக்க வேண்டும். அதனை முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.
8. எதிர்பாராத விதமாக குளத்தில் விடப்படும் மீன்கள் ஏதேனும் இறந்து மிதந்தால் உடனடியாக அன்றைய தினமே முறையாக அப்புறப்படுத்த வேண்டும்.
9. மீன் வளர்க்க, பிடிக்க நகராட்சி அல்லாத பிற துறை அனுமதி பெற வேண்டி இருப்பின் ஒப்பந்ததாரரே நேரில் பெற்றுக்கொள்ள வேண்டும்.
10. பிடித்தம் செய்யக்கூடிய மீன்கள் குடிநீர் பாதுகாப்பு வளாகத்தினை விட்டு உடன் அப்புறப்படுத்தி வெளியிடத்தில் தான் விற்பனை செய்ய வேண்டும். குடிநீர் தேக்க வளாகத்தில் கடை ஏதும் எக்காரணம் முன்னிட்டும் அமைக்கக்கூடாது.
11. பிடிக்கக் கூடிய மீன்களை வளாகத்தின் உட்புறம் எக்காரணத்தினை முன்னிட்டும், சமைக்கவோ, கழிவுகள் கொட்டவோ கூடாது.
12. காப்புத் தொகை ரூ.50,000/–

<u>அலுவலகக்குறிப்பு</u> மேற்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கலாம்.

**15.** பழநி நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் மேலாண்மை இயக்குனர், தமிழ்நாடு டீ ப்ளேண்டேசன் கார்ப்பரேசன் லிமிடெட், குன்னூர் என்ற அரசு சார்ந்த நிறுவனத்திடமிருந்து பொருட்களை விற்பனை செய்வதற்கு அனுமதி கடிதத்தின்படி, புதிய பேருந்து நிலையத்தில் “8x8” என்ற அளவில் பெட்டிக் கடை நடத்திக் கொள்வதற்கும் நகராட்சி பொறியாளர் குறிப்பின்படி, பதிவுத்துறை மற்றும் பொதுப்பணித்துறை வழிகாட்டின் படி மாத வாடகை ரூ. 1600/– நிர்ணயம் செய்யப்பட்டு, அதனடிப்படையில் மேலாண்மை இயக்குனர், குன்னூர்க்கு ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மேலாண்மை இயக்குனர், தமிழ்நாடு டீ ப்ளேண்டேசன் கார்ப்பரேசன் லிமிடெட், குன்னூர் என்ற அரசு சார்ந்த நிறுவனம் பெயரில் ஒதுக்கீடு செய்து அனுமதிக்கலாம் (ந.க.எண். **2124/2018அ1**).

**16.** பழநி நகராட்சி பொதுசுகாதார 6 வது பிரிவு இயங்கி வந்த கட்டிடம் தற்பொழுது பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதால், ஏற்கனவே இயங்கி வந்த சுகாதார பிரிவு பட்டத்து விநாயகர் கோவில் தெருவில் உள்ள கட்டிடம் காலியாக உள்ளது. எனவே மேற்படி கட்டிடத்தினை (11 x 10) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வாடகைக்கு ஒப்படைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

பொது சுகாதாரம் 6 வது பிரிவு இயங்கி வந்த (11 x 10) கட்டிடம் தற்பொழுது காலியாக உள்ளதால் மேற்படி கட்டிடத்தினை நகராட்சி குத்தகை ஏல நிபந்தனை மற்றும் அரசாணைக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வாடகைக்கு விட மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 2462 /2018/அ1).**

**17.** பழநி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் புத்தகப் பெட்டிக் கடை வைப்பதற்கு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நிலை) துறை அரசு ஆணை (2ப) எண்.120, நாள் 10–07–2017–ல் அனுமதி அளித்ததன்படி, தமிழ் நூல்கள் மட்டும் விற்பனை செய்ய தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் வெளியீட்டார்கள் சங்கத்தின் நிறுவனமான விஜயா பதிப்பகம், பழனி கிளையில் புதிய பேருந்து நிலையம் வடக்கு நுழைவு வாயில் தேனி பேருந்து நிலையத்திற்கு எதிரில் 6 x 10 அளவில் நடத்தப்பட்டு வருகிறது. புத்தகங்களை பார்க்க வருகின்ற பொது மக்களின் வசதிக்காக பெட்டிக்கடையை விரிவுப்படுத்துவதற்கு அருகில் உள்ள காலியிடம் பொது மக்களால் முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது எனவும், மேற்படி இடத்தினை புத்தக்கடைக்கு வழங்குமாறு கோரியுள்ளார்கள்.

மேற்படி, இடத்தினை ஆய்வு செய்த நகரமைப்பு ஆய்வர் தனது மனுவில் மேற்படி இடம் போக்குவரத்திற்கு இடையூறாக இல்லை எனவும் மேற்படி இடத்தினை வழங்கினார் சுற்றுப்புறம் தூய்மையாக இருக்கும் என தெரிவித்துள்ளார். துப்புரவு ஆய்வர் குறிப்பில் மேற்படி இடம் தூய்மையாக பராமரித்து வந்தாலும், இரவு நேரத்தில் ஒதுக்குப்புறமாக இருப்பதால் சிறுநீர் கழிப்பிடமாக பயன்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி மனுதாரர் கோரியுள்ளபடி அரசு ஆணையில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி, 6 x 10 அளவுள்ள இடத்தினை 20 x 10 அளவில் மாற்றம் செய்யவும் உரிமம் பெற்றவுடன் தன்னுடைய சொந்த செலவில் கடையினை நிர்மானித்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை மற்றும் அரசு ஆணையில் தெரிவித்துள்ள இதர நிபந்தனைகளின்படி அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு**

நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (நிலை) துறை அரசு ஆணை (2ப) எண்.120, நாள் 10–07–2017–ன் நிபந்தனைகளின்படி மன்றம் அனுமதிக்கலாம்.

**18.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகள் மற்றும் கடித அறிவுரையின்படியும், தொற்று நோய்களை பரப்பக்கூடிய சிற்றுயிரினங்களை கட்டுப்படுத்தும் பணிகளை வருடந்தோறும் செயல்படுத்தவும் அதற்காக 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர்களை அமர்த்தி கொண்டு செயல்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் சுய உதவிக்குழு மூலம் மேற்க்கொள்ளப்பட்ட பணிகள் ரத்து செய்யப்பட்டு வெளிப்புற பணியாளர்களை கொண்டு (Out Sourcing Method) பணி 16–11–2017–ம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது ஒப்பந்தப்புள்ளி காலம் 15–08–2018 உடன் முடிவடைகிறது. எனவே, 16–08–2018–ம் தேதி முதல் இப்பணியை தொடர்ந்து செயல்படுத்தவும் மேற்படி பணிகளை வெளிப்புற பணியாளர்கள் (Out Sourcing Method) மூலம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சியில் மொத்தமுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை 18756 ஆகும். மேற்படி, குடியிருப்புகளில் 300 வீடுகளுக்கு ஒரு நபர் வீதம் சராசரியாக 62 பேரும் இந்கர் அருள்மிகு முருகப்பெருமானின் ஆறுபடை தலங்களில் மூன்றாவது படைவீடாகவும் தமிழ்நாட்டிலேயே அதிக பக்தர்கள் வந்து வழிபடக்கூடிய திருத்தலமாக உள்ள நகரமாக இருப்பதாலும், தினசரி பக்தர்களின் யாத்திரிகர்கள் குறைந்தபட்சட் 15000 முதல் விழாக்காலங்களில் ஐந்து லட்சம் நபர்கள் வரை வந்து செல்லும் நகராக உள்ளதாலும், புகை மருந்து தெளிக்க 4 நபர்கள் ஆக மொத்தம் 66 நபர்கள் மூலம் பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டு அதனடிப்படையில் மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் அவர்களின் விலை விகித அட்டவணையின்படி, பணி மேற்கொள்ள செலவின விபரம் கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | களப்பணியாளகள் 66 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.332/– வீதம் ஒரு வருடத்தில் ஞாயிற்றுக்கிழமை தவிர 313 தினங்களுக்குரிய ஊதியம் | 6858456/- |
| 2 | ESI & EPF பிடித்தம் 10% | 685845/- |
| 3 | சேவைக்கட்டணம் 5% | 342922/- |
| | **மொத்தம்** | **7887223/–** |

ஏற்கனவே 90 தற்காலிக பணியாளர்கள் ஒப்பந்தப் புள்ளி மூலம் Southern Solid Waste Management Services, கன்னியாகுமரி அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிக்காலம் வரும் 15–08–2018–ல் முடிவடைவதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி வெளிப்புற பணியாளர்கள் (Out Sourcing Method) மூலம் மீண்டும் 12 மாதங்களுக்கு (ஞாயிற்றுக்கிழமை தவிர 313 தினங்களுக்கு) நியமனம் செய்யவும் அதற்குண்டான உத்தேச செலவினத் தொகை **ரூ.78,87,223/–** பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் பொது சுகாதார அவசர அவசியம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி தனி அலுவலர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலர் கூட்டத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகள் மற்றும் கடித அறிவுரையின்படியும், தொற்று நோய்களை பரப்பக்கூடிய சிற்றுயிரினங்களை கட்டுப்படுத்தும் பணியாக உள்ளதாலும் பொது மக்கள் நன்மை மற்றும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி இப்பணிகள் மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2127/2017/எச்2)

**19.** பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு எதிர்வரும் பருவமழைக் காலத்தை முன்னிட்டு 1 முதல் 33 வார்டுகளில் கொசு ஒழிப்பு பணிக்காக டெமிபாஸ், புகை போக்கி மருந்து – பைரத்திரம், போதியளவு இருப்பு வைத்திருக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தியிருப்பதால், பிரிவு 1 முதல் 6 வரை தேவையான மருந்துகள் தேவைப்பட்டியல் துப்புரவு ஆய்வாளர்களால் வழங்கப்பட்ட பட்டியல் விவரப்படி கீழ்கண்டுள்ளவாறு தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் (TNMSC), சென்னை அவர்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள, அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து வாங்கவும்,

| வ. எண் | பிரிவு 1 முதல் 6 வரை தேவையான மருந்துகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | | நிறுவனத்தின் பெயர் | மருந்தின் அளவு | 1 லி விலை ரூ. | மொத்தம் ரூ. |
| 1 | டெமிபாஸ் / TEMEPHOS | **M/s. Heranba Industries, Chennai** | **500 லிட்டர்** | **569.32** | **284660** |
| 2 | பைரத்திரம் / PYRETHYRUM 2% | **M/s. Paramount Pestcides Ltd Thiyagaraya Nagar Chennai** | **300 லிட்டர்** | **993** | **297900** |
| | | | | **Total** | **582560** |
| | | | | **GST** | **69907** |
| | | | | **Other** | **10000** |
| | | | | **Grand Total** | **662467** |

மேற்கண்ட பட்டியல் விவரப்படி மொத்தம் **ரூ.6,62,467**/- பொது நிதியில் செலவு செய்ய கூட்டத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதி கொசு ஒழிப்பு மருந்துகள் வாங்கி பயன்படுத்த கூட்டப்பொருள் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3786/2015/எச்2)

நகராட்சி அலுவலகம், பழனி
நாள். 15–06–2018

தனி அலுவலர்
பழனி நகராட்சி